பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை–28 அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: டாக்டர். இரா.செல்வராஜ்., இ.ஆ.ப.,

ந.க.எண்.10066/2019/அ6 நாள்: 31.12.2021

20 JAN 2022

பொருள் : பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – சேலம் மண்டலம் – நாமக்கல் மாவட்டம்– வேலூர் பேரூராட்சியில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து 19.10.2016–ல் பணியிடை காலமான ரவிச்சந்திரன்(திரு)கே. என்பவரின் வாரிசுதாரரும் மகனுமான– விக்னேஷ்(திரு)ர.என்பவரை கருணை அடிப்படையில் மல்லசமுத்திரம் பேரூராட்சியில் 18.04.2018–ஆம் நாள் முற்பகல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தது – இளநிலை உதவியாளர் பணிநிலையில் ஓராண்டு பணி பூர்த்தி செய்தது– பணிவரன்முறைப்படுத்தி – ஆணையிடுதல்–தொடர்பாக

பார்வை :
1. நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 9060/2017//பே2, நாள்.12.04.2018
2. நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவரின் கடிதம் ந.க.எண்.1174/2019/பே2, நாள்.16.08.2019.
3. இவ்வியக்கக கடிதம் ந.க.எண்.10066/2019/அ9, நாள்.16.09.2019
4. அரசு கடிதம் ந.க.எண்.24039/பேரூ.1/2019–1, நாள்.27.08.2021
5. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(கியூ) துறை, நாள்.26.02.2021

*******

**ஆணை:**

சேலம் மண்டலம், நாமக்கல் மாவட்டம், வேலூர் பேரூராட்சியில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து 19.10.2016–ல் பணியிடை காலமான திரு.கே.ரவிச்சந்திரன் என்பவரின் வாரிசுதாரரும் மகனுமாகிய திரு.ர.விக்னேஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில் பார்வை 1–ல் காணும் செயல்முறைகளின் படி மல்லசமுத்திரம் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு 18.04.2018 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளார்.

அதன் தொடர்ச்சியாக பார்வை 2–ல் காணும் கடிதத்தில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட தனியரது பணியினை வரன்முறை செய்ய வரப்பெற்ற கருத்துருவினை பார்வை 3–ல் காணும் இவ்வியக்கக கடிதம் மூலம் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பார்வை 4–ல் காணும் அரசு கடிதத்தில் அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(கியூ) துறை, நாள்.26.02.2021–ல் வெளியிடப்பட்ட வழிமுறைகளின் படி நியமன அலுவலருக்கு ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற பேரூராட்சிகளின் ஆணையாளரே இந்நேர்வில் பணிவரன்முறை செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரம் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.ர.விக்னேஷ் என்பவரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான கலம் 5–ல் காணும் நாள் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

| வ.எ | பணியாளர் பெயர்/ பணியின் நிலை | பணிபுரியும் பேரூராட்சி | பணியில் சேர்ந்த நாள் | பணியினை வரன்முறைப்படுத்திய நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | திரு.ர.விக்னேஷ் இளநிலை உதவியாளர் | மல்லசமுத்திரம் பேரூராட்சி | 18.04.2018 மு.ப | 18.04.2018 மு.ப |

மேலும் தனியரின் பணிப்பதிவேட்டில் இப்பொருள் தொடர்பாக உரிய பதிவுகளை மேற்கொள்ளவும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான பதிவேட்டின் நகலினை அனுப்பிடவும் சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

பேரூராட்சிகளின் ஆணையர்

பெறுநர்:
திரு.ர.விக்னேஷ்,
இளநிலை உதவியாளர்,
மல்லசமுத்திரம் பேரூராட்சி.
(சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் வாயிலாக)

நகல்:
1. மாவட்ட ஆட்சித்தலைவர், நாமக்கல் மாவட்டம்
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், சேலம் மண்டலம்
3. செயல் அலுவலர், மல்லசமுத்திரம் பேரூராட்சி
4. அ6 இருப்புப் கோப்பு

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்
சேலம் மண்டலம், சேலம்-1.

ந.க.எண்: 9060/2017/அ2 நாள்: 24.01.2022

அனுப்பப்படுகிறது.

உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்)
சேலம் மண்டலம், சேலம்.

பெறுநர்,
திரு.ர.விக்னேஷ்
இளநிலை உதவியாளர்
மல்லசமுத்திரம் பேரூராட்சி.